ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

# ॥ திருவாய்மொழித் தனியன்கள் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திருவாய்மொழித் தனியன்கள் ॥

## நாதமுனிகள் அருளிச்செய்தது

ப4க்தாம்ருதம் விஶ்வஜநாநுமோத3நம்
ஸர்வார்த2த3ம் ஸ்ரீஶட2கோபவாங்மயம் ।
ஸஹஸ்ரஶாகோ2பநிஷத்ஸமாக3மம்
நமாம்யஹம் த்3ராவிட3வேத3ஸாக3ரம் ॥

## ஈச்வரமுனிகள் அருளிச்செய்தது

திருவழுதி நாடென்றும் தென் குருகூர் என்றும்*
மருவினிய வண்பொருநல் என்றும்*-அருமறைகள்
அந்தாதி செய்தான் அடியிணையே* எப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே! தெளிந்து

## சொட்டை நம்பிகள் அருளிச்செய்தது

மனத்தாலும் வாயாலும் வண் குருகூர் பேணும்*
இனத்தாரையல்லா திறைஞ்சேன்*-தனத்தாலும்
ஏதும் குறைவிலேன்* எந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று

## அனந்தாழ்வான் அருளிச்செய்தது

ஏய்ந்தபெருங்கீர்த்தி இராமானுசமுனி தன்*
வாய்ந்தமலர்ப் பாதம் வணங்குகின்றேன்*-ஆய்ந்த பெரும்
சீரார் சடகோபன்* செந்தமிழ் வேதம் தரிக்கும்
பேராத உள்ளம் பெற

## பட்டர் அருளிச்செய்தவை

வான் திகழும் சோலை மதிளரங்கர் வண் புகழ்மேல்⋆
ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும்⋆-ஈன்ற
முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த⋆
இதத்தாய் இராமுனுசன்

மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும்⋆
தக்க நெறியும் தடையாகித்தொக்கியலும்⋆
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர் கோன்⋆
யாழினிசை வேதத் தியல்

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖